


**தலைவர்**
**தாமஸ் எஸ். மான்சன்**

# அன்போடு கர்த்தருக்கு சேவை செய்யுங்கள்

*தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன், அதை இரட்சித்துக் கொள்ளுவான்" (லூக்கா 9:24), என கர்த்தராகிய இயேசு கிறிஸ்து போதித்தார்.*

*மற்றவர்களுக்கான நமது சேவையில் நம்மை நாம் இழக்காதவரை, நமது சொந்த வாழ்க்கையில் மிகச் சிறிய நோக்கமேயிருக்கிறதென, இரட்சகர் நமக்குச் சொல்வதை நான் நம்புகிறேன். மற்றவர்களுக்கான சேவையில் தங்களை இழப்பவர்கள் வளர்ச்சியடைந்து, செழிப்படைந்து, அதன் விளைவாக தங்களுடைய வாழ்க்கையை காத்துக்கொள்ளும்போது, தங்களுக்காக மட்டுமே வாழ்கிறவர்கள் இறுதியாக குறுகிப்போய், தங்கள் வாழ்க்கையை இழந்துபோகிறார்கள் என தலைவர் தாமஸ் எஸ்.மான்சன் சொன்னார்.[1]*

*அவர்கள் கர்த்தரின் கரங்களென்றும், உண்மையாக மற்றவர்களுக்கு சேவை செய்கிறவர்களுக்காக நித்திய ஆசீர்வாதங்கள் காத்திருக்கின்றன, என்றும் தலைவர் மான்சனின் ஊழியத்திலிருந்து பின்வரும் மேற்கோள்களில் பிற்காலப் பரிசுத்தவான்களுக்கு அவர் நினைவூட்டுகிறார்.*

## *ஆலயத்தில் சேவை*

"திரைக்கு அப்பால் சென்றவர்களுக்காக பதிலி நியமங்களை நாம் செய்யும் போது மகத்தான சேவை செய்யப்படுகிறது. அநேக சமயங்களில் நாம் யாருக்கு சேவை செய்கிறோமென்பதை நாம் அறியாதிருக்கிறோம். நாம் நன்றியை எதிர்பார்ப்பதில்லை, அப்படியே நாம் வழங்கியதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா என்ற நிச்சயமும் நமக்குக் கிடைப்பதில்லை. எப்படியாயினும், நாம் சேவை செய்கிறோம், அந்த நடவடிக்கையில் வேறெந்த முயற்சியிலிருந்தும் வராததை நாம் பெறுகிறோம்: நாம் உண்மையிலேயே சீயோன் மலையின் இரட்சகர்களாகுகிறோம். இங்கே பூமியிலிருக்கிற நம்மால் அவர்களுக்காக எதாவது செய்யப்படாதவரை முன்னேறிச்செல்ல எந்த வழிகளுமில்லாமலிருக்கிறவர்களுக்காக, ஆலயத்தில் நாம் பதிலி பணியைச் செய்யும்போது, நமக்காக ஒரு பதிலி பலியாக நமது இரட்சகர் அவரது ஜீவனைக் கொடுத்ததைப்போல, ஒரு சிறிய அளவில் நாமும் செய்கிறோம்".[2]

## *நாமே கர்த்தரின் கரங்கள்*

"எனது சகோதர சகோதரிகளே, குடும்ப அங்கத்தினர்களானாலும், நண்பர்களானாலும், பரிச்சயமானவர்களானாலும், அல்லது அன்னியர்களானாலும், நமது கவனிப்பு, நமது ஊக்கமளிப்பு, நமது ஆதரவு, நமது ஆறுதல், நமது அன்பு தேவைப்படுகிறவர்களால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். அவருடைய பிள்ளைகளுக்கு சேவை செய்யவும், தூக்கிவிடவும், பொறுப்புடன் இங்கே பூமியில் நாம் கர்த்தரின் கரங்களாயிருக்கிறோம். அவர் நம் ஒவ்வொருவரையும் நம்பியிருக்கிறார் . . . .

"நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கிற அந்த

சேவை,இயேசு கிறிஸ்துவுக்கு செய்கிற சேவை”[3]

### *இரட்சகரின் நிழலில் சேவைசெய்தல்*

*“ ‘என் சபையிலே நீங்கள் செய்யவேண்டியவைகளை அறிந்திருக்கிறீர்கள்; ஏனெனில் நான் செய்யக்கண்ட கிரியைகளை நீங்களும் செய்வீர்களாக; நான் செய்யக் கண்டவைகளை நீங்களும் செய்வீர்களாக’ (3நேபி 27:21) என புதிய உலகத்தில் உயிர்த்தெழுந்த கர்த்தர் அறிவித்தார்.*

*“நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்த நசரேயனாகிய இயேசுவின் நிழலில் நாம் சேவை செய்யும்போது நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கிறோம். (அப்போ. 10:38). பூமியில் அவரது பிள்ளைகளுக்கு நாம் சேவை செய்யும் போது பரலோகத்திலுள்ள நமது பிதாவுக்கு நாம் சேவை செய்வதில் சந்தோஷத்தைக் காண, தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார்.”[4]*

### *சேவை செய்வதற்கான அவசியம்*

*“‘சேவை செய்வதற்கு நமக்கு சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டியது அவசியம். ஆர்வமாயிருப்பதிலிருந்து நழுவிப்போன அங்கத்தினர்களுக்காக அல்லது தீர்மானம் எடுக்காமல் அங்கேயே நின்றுகொண்டிருப்பவர்களுக்காக, அவர்களை அணுக எதாவது வழிக்காக ஜெபத்துடன் நாம் நாடலாம். முழு ஆர்வமுள்ளவர்களாக அவர்கள் திரும்ப தேவையாக சில பொறுப்புகளை அவர்கள் எடுத்துக்கொள்ள அவர்களை கேட்பது ஊக்கமளிப்பதாயிருக்கும். ஆனால் இது சம்பந்தமாக உதவ முடிகிற தலைவர்கள் சிலநேரங்களில் அதைச் செய்ய தயங்குகிறார்கள். மக்கள் மாறுவார்களென்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். அவர்களுடைய கெட்ட பழக்கங்களை அவர்கள் விட்டுவிடலாம். மீறுதல்களிலிருந்து அவர்கள் மனந்திரும்பலாம். ஆசாரியத்துவத்தை அவர்கள் தகுதியுள்ளவர்களாக தரித்துக்கொள்ளலாம். கருத்தாய் அவர்கள் கர்த்தருக்கு சேவை செய்யலாம்.”[5]*

### *நாம் செய்யவேண்டியவற்றை எல்லாம் நாம் செய்கிறோமா?*

*“உலகத்திற்கு நமது உதவி தேவையாயிருக்கிறது. நாம் செய்யவேண்டியதை நாம் செய்துகொண்டிருக்கிறோமா? தலைவர் ஜான் டெய்லரின் வார்த்தைகளை நாம் நினைவில் வைத்திருக்கிறோமா: ‘உங்கள் அழைப்பை நீங்கள் நிறைவேற்றாதிருந்தால், நீங்கள் உங்கள் கடமையைச் செய்திருந்தால் நீங்கள் காப்பாற்றியிருக்கக்கூடியவர்களின் பொறுப்பை தேவன் உங்கள்மேல் சுமத்துவார்’. உறுதியாக்கப்படவேண்டிய கால்களும், பிடிக்கப்படவேண்டிய கரங்களும், ஊக்கமளிக்கப்பட வேண்டிய மனங்களும், உணர்த்தப்பட வேண்டிய இருதயங்களும், காப்பாற்றப்படவேண்டிய ஆத்துமாக்களுமிருக்கின்றன. நித்தியத்தின் ஆசீர்வாதங்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. சேவையின் மேடையில் பார்வையாளர்களாக அல்ல பங்கேற்பவர்களாக இருப்பது உங்களின் சிலாக்கியம்.”[6]*

குறிப்புகள்

1. “What Have I Done for Someone Today?” *Liahona,* Nov. 2009, 85.
2. “Until We Meet Again,” *Liahona,* May 2009, 113-14.
3. “What Have I Done for Someone Today?” 86, 87.
4. “The Savior’s Call to Serve,” *Liahona,* Aug. 2012, 5.
5. “See Others as They May Become,” *Liahona,* Nov. 2012, 68.
6. “Willing and Worthy to Serve,” *Liahona,* May 2012, 69.
7. *Teaching, No Greater Call: A Resource Guide for Gospel Teaching* (1999), 12

---

### இந்த செய்தியிலிருந்து போதனை

“கிறிஸ்துவைப்போன்ற அன்பு உங்களுக்கிருந்தால் சுவிசேஷத்தைப் போதிக்க நீங்கள் சிறப்பாய் ஆயத்தப்பட்டிருப்பீர்கள். இரட்சகரை அறிந்துகொள்ளவும் அவரைப் பின்பற்றவும் மற்றவர்களுக்குதவ நீங்கள் உணர்த்தப்படுவீர்கள்.”[7]. நீங்கள் சந்திக்கிறவர்களுக்காக அதிகமான அன்பிற்காக ஜெபிப்பதை கருத்தில் கொள்ளவும். அவர்களுக்காக கிறிஸ்துவைப்போன்ற அன்பை நீங்கள் வளர்த்துக்கொள்வதால், கர்த்தருக்கும் நீங்கள் போதிப்பவர்களுக்கும் அர்த்தமுள்ள வழிகளில் சிறப்பாக சேவை செய்ய உங்களால் முடியும்.

## வாலிபர்

# சேவையின் கோடை

எலிசபெத் பிளைட்

ஒரு கோடை காலத்தில் அயல் நாடு ஒன்றில் விசேஷித்த தேவைகளுடனிருந்த பிள்ளைகளுடன் பணியாற்றிக்கொண்டிருந்தேன். பிள்ளைகளை நான் முதலில் சந்தித்தபோது, எனக்கு மிகவும் பயமாயிருந்தது. அவர்களின் பாஷை எனக்குத் தெரியாது, ஆனால் என்னுடைய உரையாடலில் பரிசுத்த ஆவியானவர் எனக்குதவுவார், என நான் நம்பியிருந்தேன். ஒவ்வொரு பிள்ளையுடனும் நான் பரிச்சயமானபோது, அன்பு செலுத்துவதற்கு மொழி ஒரு தடையல்ல, என்பதை நான் அறிந்தேன். பிள்ளைகளுடன் நான் விளையாடி, சிரித்து, பொம்மைகள் செய்தேன், அவர்கள் மேல் முற்றிலுமாக அன்பை உணர்வதைத் தடுக்க முடியவில்லை. அவருடைய

*பிள்ளைகளிடத்தில் பரலோக பிதாவுக்கிருந்த அன்பை நான் உணர்ந்தேன், மற்றும் என் இதயத்தை நிரப்பிய சந்தோஷத்தை விவரிக்க இயலாது.*

*மற்றவர்களுக்கு சேவை செய்யும்போதெல்லாம், நான் சேவை செய்கிற அவர்களிடம் மட்டும் அல்லாமல், பரலோக பிதாவிடமும் நான் அன்பை உணர்கிறேன். "உங்கள் உடனுற்றார்களுக்கு நீங்கள் சேவை செய்யும் போது தேவனுக்கே சேவை செய்கிறீர்களென்பது" (மோசியா 2:17) உண்மையாகவே எனக்குத் தெரிய வந்தது. ஒரு பெரிய சேவை திட்டத்தின் மூலமாகவோ, அல்லது அன்பின் ஒரு சிறிய நடவடிக்கையின் மூலமாகவோ, என்னுடைய சேவையின் நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதாகும் (மத்தேயு 5:16 பார்க்கவும்). நான் மற்றவர்களுக்கு சேவை செய்யும்போது பரலோக பிதாவிடம் எனக்குள்ள அன்பையும் என்னுள் ஒளிவிடும் கிறிஸ்துவின் ஒளியையும் மக்கள் கண்டுகொள்வார்கள், என நம்புகிறேன்.*

*எழுதியவர் விர்ஜினியா, அ.ஐ.நாட்டில் வசிக்கிறார்.*

## பிள்ளைகள்

### அன்பின் சங்கிலிகள்

*ஒவ்வொரு காகிதத்துண்டும் சுமார் 1 அங்குல (2.5 செ.மீ) அகலமும், 8 அங்குல (20செ.மீ) நீளமுமிருக்குமாறு, 28 மெல்லிய காகிதத் துண்டுகளை வயது வந்த ஒருவரின் துணையுடன் வெட்டுங்கள். ஒருவர் மீது உங்களின் அன்பைக் காட்ட இந்த மாதத்தில் ஒவ்வொரு நாளும் சேவையின் செயலைச் செய்யுங்கள். உங்கள் வீட்டை சுத்தம் செய்ய உங்கள் பெற்றோருக்கு நீங்கள் உதவலாம், அல்லது அண்டை வீட்டாருக்கு அன்பின் குறிப்பு ஒன்றினை எழுதலாம்.*

*ஒவ்வொரு நாளும் நீங்கள் எவ்வாறு சேவை செய்தீர்களென்று, உங்கள் காகிதத் துண்டுகளில் எழுதுங்கள், பின்னர் ஒரு வளையத்தை உண்டாக்க காகிதத்துண்டின் இரு பக்கத்தையும் மற்ற துண்டுகளுடன் வட்ட வடிவில் பசையால் ஒட்டுங்கள். உங்கள் வளையங்களை இணைக்கலாம். புதிய துண்டுகளின் ஓரங்களை ஒன்றாக ஒட்டுவதற்கு முன் முந்திய நாளின் வளையத்தினூடே புதிய துண்டின் ஓரத்தை நுழைத்து உங்கள் வட்டங்களை இணைக்கலாம். உங்கள் அன்பின் சங்கிலிகளின் வளர்ச்சியைக் கவனியுங்கள்! பிப்ருவரி மாதம் முடிந்த பின்னும் உங்கள் சேவையின் சங்கிலியை நீங்கள் தொடரலாம்.*

© 2014 by Intellectual Reserve, Inc. *எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/13. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/13. First Presidency Message, February 2014* மொழிபெயர்ப்பு. Tamil. 10862 418

விசுவாசம், குடும்பம், ஒத்தாசை

# இயேசு கிறிஸ்துவின் தெய்வீக ஊழியம்: நல்ல மேய்ப்பன்

*இதை ஜெபத்துடன் படித்து எதைப் பகிர்ந்துகொள்வதென்பதை அறிந்து கொள்ள நாடுங்கள். இரட்சகரின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் புரிந்து கொள்ளுதல் எவ்வாறு அவர் மீதுள்ள விசுவாசத்தை அதிகரித்து, விசாரிப்புப் போதகத்தின் மூலமாக நீங்கள் கண்காணிக்கிறவர்களை ஆசீர்வதிக்கும்? அதிகத் தகவலுக்கு reliefsociety.lds.org. பார்க்கவும்.*

இரட்சகரின் ஊழியத்தின் தன்மைகளைக் கொண்டிருக்கிற விசாரிப்புப் போதக செய்திகளின் தொடரில் இது ஒரு பகுதி.

*நல்ல மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்து போதித்தார்:*

*“உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?*

*“மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும், என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (லூக்கா 15:4, 7).*

இயேசு கிறிஸ்து நல்ல மேய்ப்பன் என்பதை நாம் புரிந்துகொள்ளும்போது, அவரது எடுத்துக்காட்டைப் பின்பற்றவும் தேவையிலிருப்போருக்கு சேவை செய்யவும் நமது விருப்பம் அதிகரிக்கிறது, “நானே நல்ல மேய்ப்பன், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன். . ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்” (*யோவான் 10:14*) என இயேசு சொன்னார். கிறிஸ்துவின் பாவநிவர்த்தியால், வீட்டுக்குத் திரும்ப வழியைக் கண்டுபிடிக்க முடியாமல் நம்மில் யாரும் காணாமற்போவதில்லை (லூக்கா 15 பார்க்கவும்).

தலைவர் தாமஸ் எஸ்.மான்சன் சொன்னார், “மந்தையைக் கண்காணிப்பது நமது பொறுப்பு. . . . நாம் ஒவ்வொருவரும் சேவை செய்ய அடி எடுத்து வைப்போமாக”[1]

## வேதங்களிலிருந்து

*சங்கீதம் 23; ஏசாயா 40:11; மோசியா 26:21*

## நமது வரலாற்றிலிருந்து

*முதல் ஒத்தாசைச் சங்கக் கூட்டத்தில் பங்கேற்ற எலிசபெத் ஆன் விட்னி 1830ல் அவரது மனமாற்றத்தைப்பற்றி சொன்னார்: “மூப்பர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததை நான் கேட்டவுடனேயே, அது நல்ல மேய்ப்பனின் குரல் என்பதை நான் அறிந்துகொண்டேன்.”[2]* நல்ல மேய்ப்பனின் குரலைப் பின்பற்றி எலிசபெத் ஞானஸ்நானம் பெற்று திடப்படுத்தப்பட்டார்.

நாமும் நல்ல மேய்ப்பனின் குரலைக் கேட்டு அவரது போதனைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். தலைவர் மான்சன் சொன்னார், “அவரது பிள்ளைகளுக்கு சேவை செய்து தூக்கிவிடும் பொறுப்புடன், இங்கே பூமியில் நாம் கர்த்தரின் கரங்களாயிருக்கிறோம்.”[3]

ஒரு காணாமற்போன ஆட்டைத் தேடுகிற ஒரு மேய்ப்பனைப்போல, அலைந்துதிரியும் ஒரு பிள்ளையை பெற்றோர் தேடலாம். பிரதான தலைமையில் இரண்டாவது ஆலோசகரான, தலைவர் ஜேம்ஸ் இ.பாஸ்ட் (1920-2007) சொன்னார்: “ தங்களுடைய கீழ்ப்படியாத பிள்ளைகளுக்காக போதிக்க ஜெபத்துடனிருக்கிற, நீதியான, நேர்மையான, மற்றும் மனமுடைந்த பெற்றோர்களாகிய உங்களுக்கு நாங்கள் சொல்கிறோம், நல்ல மேய்ப்பன் அவர்களை கண்காணித்துக் கொண்டிருக்கிறார். உங்களுடைய ஆழ்ந்த துக்கத்தை தேவன் அறிந்திருக்கிறார், புரிந்திருக்கிறார். நம்பிக்கை இருக்கிறது.”[4]

**குறிப்புகள்**

1. Thomas S. Monson, “Heavenly Homes, Forever Families,” *Liahona,* June 2006, 70.
2. Elizabeth Ann Whitney, in *Daughters in My Kingdom: The History and Work of Relief Society* (2011), 128.
3. Thomas S. Monson, “What Have I Done for Someone Today?” *Liahona,* Nov. 2009, 86.
4. James E. Faust, “Dear Are the Sheep That Have Wandered,” *Liahona,* May 2003, 68.

### *என்னால் என்ன செய்யமுடியும்?*

**1.** நமது வாழ்க்கையில் சமாதானத்தைக் கொண்டுவருகிற இரட்சகரே நல்ல மேய்ப்பன் என்பதை எப்படி அறிந்துகொள்வது?

**2.** சபை நடவடிக்கையிலிருந்து “காணாமற்போன” அல்லது நமது விசுவாசத்தைச் சாராதவர்களுக்கு எந்த வழிகளில் நாம் ஊழியம் செய்ய முடியும்?

3. சுவிசேஷத்தின்படி வாழ்வதிலிருந்து வழிவிலகிப்போன பிள்ளைகளின் பெற்றோருக்கு நான் எவ்வாறு ஆதரவளிக்க முடியும்?

© 2014 by Intellectual Reserve, Inc. *அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது. அ.ஐ.நாட்டில் அச்சடிக்கப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/13.* மொழிபெயர்ப்பு *அங்கீ காரம்: 6/13. Visiting Teaching Message, February 2014* மொழிபெயர்ப்பு. Tamil. *10862 418*